# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1796/9 - 2013 පෙබරවාරි මස 06 වැනි බදාදා - 2013.02.06

*1796/9 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தந்திரோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தந்திரோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர், லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகிய நான், இவ்வறிவிப்பின் மூலம் :-

(1) திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில், முதலீட்டைக் கொண்ட முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கருத்திட்டங்களை தோற்றுவித்தல், தாபித்தல் என்பன உள்ளிட்ட கனரகத் தொழில்களுக்கான ஒரு விசேட வலயமொன்றினை அபிவிருத்தி செய்து செயற்படுத்தி முகாமைத்துவம் செய்யும் அபிவிருத்திக் கருத்திட்டத்தினை தந்திரோபாய அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இனங்காண்கிறேன். ஆழ்கடல் இறங்குதுறை கட்டுமானம் உள்ளிட்ட தமது சொந்த முதலீடு அத்துடன் அல்லது எதிர்கால முதலீட்டாளர்களிடமிருந்து முயன்று பெற்றுக்கொள்கின்ற மொத்த முதலீட்டுடனான இக்கருத்திட்டத்தின் மொத்த முதலீடு சுமார் நாலாயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் (U$$ 4,000 மில்லியன்) ஆகும். கல்வி சுகாதார வசதிகள், ஓய்வு மனமகிழ்வு வசதிகளுக்கான நவீன குடியிருப்புக்கள் மற்றும் உள்ளக வீதிகள், மின்சார தேவைக்கான ஏற்பாடுகள் நீர் விநியோகம், கழிவு நீர் சுத்திகரிப்புத் தொகுதி என்பன போன்ற ஏனைய வசதிகள் போன்ற எதிர்கால முதலீட்டாளர்களின் முதலீட்டை கவரக்கூடிய கருத்திட்டத்திற்குத் தேவையான பௌதீக சமூக உட்கட்டமைப்புக்கள் வலயத்தினுள்ளேயே ஏற்படுத்தப்படும். எனவே, இந்த கருத்திட்டம் தேசத்தின் நலனுக்கானதும் நாட்டுக்குப் பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை ஈட்டித் தரவல்லதும் என்பதோடு அது நாட்டின் புவி அழகுத் தோற்றத்தினை மாற்றியமைக்கக் கூடியதகாவும் இருக்கும். வரையறுக்கப்பட்ட இலங்கை கேற்வேய்ஸ் இன்டஸ்ட்ரீஸ் (தனியார்) நிறுவனம் கருத்திட்ட நிறுவனமாகும். இலங்கை முதலீட்டுச் சபைக்கும் கருத்திட்ட நிறுவனத்துக்குமிடையே கருத்திட்ட ஒப்பந்தம் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.

(2) 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி இலங்கை முதலீட்டுச் சபைக்கும் கருத்திட்ட நிறுவனத்துக்கும் இடையில் நிறைவேற்றப்பட்ட கருத்திட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடியான பயனுறு திகதி மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் ஆரம்பத் திகதியாகுமெனவும்,

(3) மேற்சொல்லப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தந்திரோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புக்கள் கருத்திட்ட நிறுவனத்துக்கும் ஏற்புடைத்தாகும் என்பதுடன் அட்டவணையின் (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) வில் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புக்கள் கருத்திட்ட நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அதன் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் உப ஒப்பந்தக்காரர்களுக்கும் ஏற்புடைத்தாகும் எனவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

**அட்டவணை**

(அ) **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டிறைவரிச் சட்டம்**

(i) கருத்திட்ட மூலமாக ஈட்டும் இலாபம் மற்றும் ஆதாயம் மீது கருத்திட்ட நிறுவனத்திற்கு வருமான வரி விதிப்பு தொடர்பில் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இருபத்தைந்து (25) வருடங்களுக்கு (''வரி விலக்களிப்புக் காலம்'') பிரயோகமாகாது. இலாபங்களில் இருந்து பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு இலாபங்களுக்கு சொல்லப்பட்ட இருபத்தைந்து வருட (25) கால வரி விலக்களிப்புக் காலப்பகுதியிலும் அதன் பின்னர் ஒரு (01) வருடத்துக்கும் வருமான வரியில் இருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

(ii) சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலமானது கருத்திட்ட நிறுவனம் வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த இரண்டு (02) வருடங்களின் பின்னால், எது முன்னர் வருகிறதோ, அந்த ஆண்டு தொடக்கம் கணிக்கப்படும்.

(iii) மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டி மற்றும் கருத்திட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்ட உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணம் என்பன தொடர்பில் தடுத்து வைக்கும் வரி செலுத்துவதில் இருந்து கருத்திட்டக் நிறுவனத்திற்கு விலக்களிப்பு வழங்கப்படும் ;

(iv) மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் பின்னர் கருத்திட்ட நிறுவனத்தின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வரி விதிப்பு அக்காலத்தில் அமுலில் இருக்கும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செலுத்தப்படல் வேண்டும் ;

(v) நிறுவனத்தின் ஆகக்கூடிய வெளிநாட்டு ஊழியர்கள் இருபது பேர்களுக்கு (20) நீங்கள் உழைத்துச் செலுத்தும் வரியிலிருந்து (PAYE) விலக்களிப்பு எற்புடைத்தாகும். இந்த சலுகை ஐந்து (05) வருடங்கள் எனும் ஒரு காலப்பகுதிக்கு வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து பிரயோகமாகும்.

(ஆ) **2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்**

(i) கலப்புப் பிரயோகக் கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மற்றும் சேவைகள் மீது திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் கீழ் சேர்பெறுமதி வரி செலுத்தலிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும். கருத்திட்ட நிறுவனம் அல்லது கருத்திட்டத்துக்கான நேரடி வழங்குகைகள் மட்டுமன்றி கருத்திட்டக் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக கருத்திட்டத்துக்கு/ நிறுவனத்திற்கு விநியோகிப்பதற்காக உப ஒப்பந்தக்காரர் ஒருவரால் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு செய்யப்படும் வழங்குகைகளுக்கும் இந்த சேர்பெறுமதி வரி விலக்களிப்பு பிரயோகமாகும் ;

(ii) கருத்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கருத்திட்டத்தின் கட்டம் I முடிந்த பின் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடியான பயனுறு திகதியிலிருந்து மூன்று (03) வருடங்கள் எனும் காலப்பகுதிகளில் எது முன்னர் வருகிறதோ அந்த திகதி தொடக்கம் கருத்திட்ட நிர்மாண/ கட்டுமான காலகட்டத்தின் போது கருத்திட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் பூச்சிய வீதமாக்கப்படல் வேண்டும் ;

(iii) கருத்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கருத்திட்டத்தின் கட்டம் I, II, III முடிந்த பின் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடியான பயனுறு திகதியிலிருந்து ஏழு (07) வருடங்கள் எனும் காலப்பகுதிகளில் எது முன்னர் வருகிறதோ அந்த திகதியின் பின்னர் கருத்திட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் பூச்சிய வீதமாக்கப்படல் வேண்டும். சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் உட்பிரிவு (1) இன் பந்திகள் (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட சேவைகள் உட்படும் பட்சத்தில் சேர்பெறுமதி வரி செலுத்தல் பூச்சிய வீதமாக்கப்படும். பூச்சியம் வீதத்துக்குட்படுத்தப்பட்ட சேவைகளை விடுத்து வேறு ஏதும் சேவைகள் மீது பொதுவான சேர்பெறு வரி செலுத்தல் ஏற்புடைத்தாகும்.

(இ) **2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்**

கருத்திட்ட நிர்மாண/கட்டுமான காலகட்டத்தின் போது கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் எல்லா பொருட்கள் மீதுமான திருத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டத்தின் கீழான துறைமுக மற்றும் விமான நிலைய விதிப்பனவிலிருந்து நிறுவனத்திற்கு விலக்களிப்பு வழங்கப்படும் ;

(ஈ) **2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம்**

*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறான பயனுறு திகதியில் இருந்து மொத்தம் ஏழு (07) வருடக் காலப்பகுதியொன்றுக்கு திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் ஏற்புடைத்தாகாது ;*

(உ) **2005 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நிதிச் சட்டம்**

*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறான பயனுறு திகதியில் இருந்து கருத்திட்ட நிர்மாண/கட்டுமான காலப்பகுதியான ஏழு (07) வருடங்கள் எனுமொரு காலப்பகுதிக்கு கட்டடக் கைத்தொழில் உத்தரவாத நிதிய விதிப்பனவிலிருந்து மட்டும் திருத்தப்பட்டவாறான 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஏற்புடைத்தாகாது.*

(ஊ) **(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்**

*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறான பயனுறு திகதியில் இருந்து கருத்திட்ட நிர்மாண/கட்டுமான காலப்பகுதியான ஏழு (07) வருடங்கள் எனுமொரு காலப்பகுதிக்கு, கருத்திட்டத்துக்கு தேவைப்படும் கருத்திட்டம் தொடர்பான மூலதன மற்றும் கட்டுமான பொருட்களின் இறக்குமதி, அவை நேரடியாக கருத்திட்ட நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்படினும் கருத்திட்டத்தை அமுலாக்கும் நிறுவனத்தின் பெயரில் ஒப்பந்தக்காரகளால் செய்யப்படினும், இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக கருத்திட்டத்துக்காகவென மற்றும் இறக்குமதி செய்யப்படும் அவ்வாறான பொருட்கள் மீது சுங்கக் கட்டண விலக்களிப்பு எற்புடைத்தாகும்.*

*லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, பா. உ.*
*முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.*

*முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2013, பெப்புருவரி 06.*

*2-707*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

2- PG001553